# 25

# பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள்

**எட்மன்** : பாதர்! கிறிஸ்தோபர் ஒரு சிறிய பிரச்சினையை உங்களிடம் கேட்க வேண்டுமாம்.

**குரு** : என்ன பிரச்சினை கிறிஸ்தோபர்?

**கிறிஸ்தோபர்** : பாதர்! எங்கட பாட்டி திருயாத்திரை சென்று வீட்டுக்கு வந்தார். எனக்கு வரவணிக்கம் போட்ட மாலை ஒன்று கொண்டு வந்து தந்தார். உடனே நான் அதனை கழுத்தில் போட எத்தனித்த போது ''வேண்டாம் மகனே, ஆசீர்வதிக்காமல் போட வேண்டாம்'' என்றார். அப்போது எனது அம்மா ''பாட்டி கொண்டுவந்த மரியாவின் சுரூபத்தையும் மாலையையும் ஞாயிற்றுக் கிழமை ஆசீர்வதித்துக் கொள்வோம்'' என்றார். பாதர் ஏன் அவ்வாறு செய்யவேண்டும்?

**குரு** : அருளடையாளங்களைத் தவிர நமது ஆன்மீக வாழ்வினை வளப்படுத்த வேறு பல பொருட்கள் உள்ளன.(உதாரணம் உத்தரியம், வரவணிக்கம், செபமாலை, சுரூபங்கள்) இவற்றை நாம் அருள்குறிகள் என அழைப்போம். இவற்றை நாம் ஆசீர்வதித்த பின்பே பயன்படுத்துவோம். இவை பிற திருவழிபாட்டு கொண்டாட்டங்களின் ஒரு கூறு எனலாம்.

**கிறிஸ்தோபர்** : பாதர்! பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் என்றால் என்ன?

**குரு** : நன்று, நாளை மறைவகுப்பில் இதை நான் சொல்லித் தருகிறேன்.

**கிறிஸ்தோபர்** : நன்றி பாதர்.

அருள்அடையாளங்களுக்குப்புறம்பேகிறிஸ்தவவாழ்வைப்புனிதப்படுத்தவும், கிறிஸ்தவர் பயன்படுத்தும் எல்லாவற்றையும் அர்ச்சிக்கவும் திருச்சபை பயன்படுத்தும் கருவிகளே அருள் குறிகள் ஆகும்.

இறைவனைப் புகழவும் அவருடைய கொடைகளைப் பெறவும் இறைவேண்டல், இறைவழிபாடு, ஆகியவற்றுடன் தொடர்புடைய நபர்கள், பொருட்களை நேர்ந்தளிக்கும் மந்திரிப்புகள் ஆகியவை பிறதிருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் ஏனைய கூறுகளாகும்.

## விசேட பண்புகள்

- பொதுவாக ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் பிறதிருவழிபாட்டுக்குக் கொண்டாட்டங்களை நிறைவேற்றுவர்.
- சில சந்தர்ப்பங்களில் பொது நிலையினராலும் இதனை நிறைவேற்ற முடியும்.
- இக் கொண்டாட்டங்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட செபங்களும் சடங்குமுறை களும் பரிந்துரைக்கப்படுகின்றன. (உதாரணம் - தலைமேல் கை வைத்தல், நெற்றியில் சிலுவை அடையாளம் வரைதல், ஆசிநீர் தெளித்தல்)

எமது ஆன்மீக வாழ்வை வளப்படுத்தும் பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களை எமது நாட்டின், கலாசாரம் பண்பாட்டிற்கேற்பவும் நிறைவேற்ற முடியும். இவற்றை நடைமுறைப்படுத்தும் முறைகள் சில உள்ளன.

## ஆசீர்வதித்தல்

- தனிநபர்களையும் வழிபாட்டில் பயன்படுத்தப்படும் பொருட்களையும் ஆசீர்வதித்தல். (துறவிகளின் அர்ப்பணம், திருப்பலிப் பாத்திரங்கள் - இவை நிலைத்திருப்பவை)

**மரணச்சடங்கு**

- கிறிஸ்துவின் இறப்பு - உயிர்ப்பில் கிறிஸ்தவர்களின் இறப்பு அர்த்தம் பெறுகிறது.

- மரணச்சடங்கில் பங்குபற்றுவதன் மூலம் அவரோடு நமக்குள்ள நட்புறவை வெளிப்படுத்துவதோடு அவருடைய ஆன்மாவின் தூய்மைக்காக இறை வேண்டுதல் செய்கிறோம்.

- நிலை வாழ்வின் மட்டில் அங்கு கூடியிருப்போரின் நம்பிக்கையை வலுப்படுத்துதல். இவை திருச்சபையின் பணிகளாகும்.

## திருப்பண்டங்களுக்கு மரியாதை செலுத்துதல்

திருப்பண்டங்கள் புனிதர்களின் நினைவுச் சின்னம். அது புனிதர்களைப் பற்றி அறிந்து கொள்ளச் செய்வது மட்டுமல்லாமல் நமது உண்மைக் கிறிஸ்தவ வாழ்வுக்கு வழிகாட்டுதலும் அளிக்கின்றது.

## வரவணிக்கம்

வரவணிக்கம், உத்தரியம் என்பன அணிதல் ஒரு நல்ல பழக்கமாகும். இது எமது விசுவாசத்தை வெளிப்படுத்தும் செயலாகும். இதன் வழியாக புனிதர்களின் பாதுகாப்புக் கிடைக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

## பக்தி முயற்சிகள்

கிறிஸ்தவர்கள் தனித்தோ பிறரோடு சேர்ந்து குழுவாகவோ மேற்கொள்ளும் செபதப செயல்கள் பக்தி முயற்சிகள் எனப்படும்.

**உதாரணம்** தூயோரின் நவ நாட்கள்
திருப்பயணங்கள்
சிலுவைப்பாதை
செபமாலைப்பக்தி

மேற்குறிப்பிடப்பட்ட பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களின் வழியாக கிறிஸ்தவர்களாகிய நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துவதோடு தேவையான வரத்தினைக் கேட்டுக் கொள்கின்றோம். கிறிஸ்து வழியாக இறை ஆசீரைப் பெற்றுக் கொள்கின்றோம். எனவே நாம் இவற்றில் பக்தியுடனும் நம்பிக்கையுடனும் பங்குபற்றுதல் சிறப்பானதாகும்.

## செயற்பாடு

1. பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களின் விசேட பண்புகள் 3 தருக.

2. பிற வழிபாட்டுக் கொண்டாட்டங்களின் கூறுகள் 3 தருக.

3. ''கிறிஸ்தவ வாழ்வைக் கட்டியெழுப்ப பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் உதவும்'' என்னும் தலைப்பில் சுவரேட்டுக்கான ஆக்கம் ஒன்று தயாரிக்குக.

## வாழ்க்கைக்கு

திருப்பண்டங்களுக்கு மரியாதை செலுத்தப் பழக்குங்கள்.